OS.No. 63/2022
Date : 30.06.2025
Witness Name & Rank – நடராஜன் – PW1

சாட்சி அழைக்கப்பட்டு பிரவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. எனது பிறந்த தேதி எதுவென்றால் 5.5.1977 ஆகும். இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனது வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன் எனவே வழக்கில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் சரி என்றால் சரிதான். எனது தந்தை பெயர் பொன்னுசாமி என்றால் சரிதான். எனது தந்தைக்கு முத்துலட்சுமி என்பவர் முதல் மனைவி என்றால் சரிதான். எனது தந்தைக்கும் முத்துலட்சுமிக்கும் நான் மற்றும் ஒரு சகோதரி வாரிசுகள் என்றால் சரிதான். நானும் எனது சகோதரியும் பிறந்த பிறகு 40 ஆண்டுகளுக்கு முன்பே எனது அம்மா முத்துலட்சுமி இறந்துவிட்டார் என்றால் சரிதான் அதன் பிறகு எனது தந்தை லட்சுமி என்ற நபரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன லட்சுமி தான் இந்த வழக்கில் இரண்டாம் பிரதிவாதி என்றால் சரிதான் லட்சுமிக்கு ஜெயபிரகாஷ் என்ற ஒரு பையன் உள்ளார் என்றால் சரிதான்மேற்படி ஜெயபிரகாஷ் 27/3/2021 ஆம் தேதி திருமணம் செய்யாமல் காலமாகிவிட்டார் என்றால் சரிதானஎனது தந்தைக்கு பூர்வீக சொத்தானது பாகசாசன அடிப்படையில் கிடைக்கப் பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தான் வா.சா.ஆ–1 என்றால் சரிதான் மேற்படி எனது தந்தைக்கு E அட்டவணையில் 3.12 ஏக்கர் நிலமும் F அட்டவணை சொத்தில் 53 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு எனது தந்தை 02.11.2003 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3. எனது தந்தைக்கு சுய சம்பாத்திய முறையில் பாத்தியப்பட்ட ஆசாரிக்காடு கிரிச்சிபாளையக்காடு தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனத தந்தை இறந்த பிறகு மேற்படி சொத்தை நானும் 2 ம் பிரதிவாதியும் ஜெயபிரகாஷ்ம் சேர்ந்து விற்பனை செய்துவிட்டோம் என்றால் சரிதான். தந்தை மறைந்த பிறகு 23.08.2004 ம் தேதி வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்றால் நான் வாங்கவில்லை 2 ம் பிரதிவாதி ஜெயபிரகாஷ்ம் வாங்கினார்கள்.அவ்வாறு மேற்படி வாரிசு சான்றிதழ் வாங்கிய போது வருவாய்த்துறை அதிகாரிகள் என்னையும் விசாரணை செய்தார்கள் என்றால் இல்லை.

அவ்வாறு பிரதிவாதிகள் வாரிசு சான்றிதழ் வாங்கியது எனக்கு அப்போதே தெரியும் என்றால் ஆறு மாதம் கழித்து தான் தெரியும்மேற்படி வாரிசு சான்று வாங்கப்பட்டபோது நான் கையொப்பம் செய்தேனா என்றால் செய்தேன். நான இரண்டாம் வாதியான எனது சகோதரியை தவிர்த்து வாரிசு சான்றிதழ் நான்தான் வாங்கினேன் என்றால் சரியல்ல. மேற்படி வாரிசு சான்றிதழ் நான் வாங்கியதால் தான் அது குறித்து எந்தவிதமான ஆட்சேபனையும் நான் இன்றைய தேதி வரை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆறு மாதம் கழித்து வாரிசு சான்றிதழ் வாங்கிய விவரம் தெரிய வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அது குறித்து ஏதேனும் ஆட்சியபனை தெரிவிக்கப்பட்டது என்றால் பிள்ளைக்கு திருமணம் செய்ததால் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. இரண்டாம் வாதிக்கு சொத்துக்கள் கொடுக்கக் கூடாது என கெட்ட எண்ணத்துடன் நான் தான் வாரிசு சான்றிதழில் அவர் பெயரை தவிர்த்து வாங்கினேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆசாரி காடு மற்றும கிரிச்சிப்பாளையம் காடு விற்பனை செய்தபோது இரண்டாம் வாதிக்கு கிரைய தொகை பங்கு செய்து கொடுக்கவில்லை என்றால் தவறு கொடுத்தேன்.

4. இந்த வழக்கில் எனது தந்தைக்கு சுய சம்பாத்தியமாக மேற்படி ஆசாரிக்காடு கிரிச்சிப்பாளையக்காடு இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை. தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து இரண்டாம் பிரதிவாதியும் இரண்டாம் வாதியும் எனக்கு பாக விடுதலை கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பாக விடுதலை பத்திரத்தில் அன்னபூரணியான இரண்டாம் வாதி சாட்சி கையப்பம் தான் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாக விடுதலை பத்திரத்தில் நான் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தான் இரண்டாம் பிரதிவாதியும் இரண்டாம் வாதியும் பாக விடுதலை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு.மேற்படி பாக விடுதலை பத்திரத்தில் இரண்டாம் பிரதிவாதி லட்சுமிக்கும் ஜெயபிரகாசுக்கும் மூன்றில் இரண்டு பங்கு உள்ளதாக எழுதப்பட்டுள்ளது என்றால் அது தவறு. அந்த 3ல் 2 பங்கு என்பதால் தான் அந்த போனில் இரண்டு பங்கு என்பதால் தான் மேற்படி இருவருக்கும் தலா ரூபாய் 50,000 கொடுத்து ஆக விடுதலை பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். எனவே மேற்படி இரண்டாம் பிரதிவாதி லட்சுமி மனம் ஒத்து பாக விடுதலை பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. காலை எண். 851 நிலத்தை பொறுத்து எனது தந்தை மறைந்த பிறகு நானும் இரண்டாம் பிரதிவாதி லட்சுமி மற்றும் அவரது மகன்

ஜெயபிரகாசம் சேர்ந்து ஒரு தரப்பினராகவும் எனது தந்தையின் சகோதரர் மற்றொரு தரப்பினராகவும் சேர்ந்து 25/7/2017–ம் தேதி பாகப்பிரிவினை செய்தோம் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தின் படி எங்களுக்கு சி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டு அதில் 1.16 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அந்த சொத்தை வா.சா.ஆ. 5ன் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி கிரையத் தொகையை நாங்களே வைத்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. 2ம் வாதிக்கு கொடுத்தேன். மேற்படி தெரிய பத்திரத்தில் இரண்டாம் வாதி தரப்பினராக கையொப்பம் செய்யாமல் சாட்சியாக தான் கையப்பம் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி பாகசாசன பத்திரத்தில் இரண்டாம் வாதி கையொப்பம் செய்துள்ளார் என்றால் இல்லை. வழக்கு சொத்தில் சிட்டா, பட்டா, அடங்கல் போன்ற வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் என் பெயரிலும் இரண்டாம் பிரதிவாதி லட்சுமி மற்றும் ஜெயப்பிரகாஷ் பெயரிலும் இருந்து என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கான வரி இரண்டாம் பிரதிவாதி தான் செலுத்தி வந்தார் என்றால் இல்லை நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து தான் செலுத்தி வந்தோம்மேற்படி எனது தந்தை மறைந்த பிறகு நானும் லட்சுமி மற்றும் ஜெயப்பிரகாஷ் ஆகியோர் இரண்டாம் வாதி அன்னபூரணிக்கு பாகம் கொடுக்காமல் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்றால் அது தவறு. எனவே இரண்டாம் வாதிக்கு அவர் பரிகாரத்தை கோர அருகதை அற்றவர் என்ற அடிப்படையில் அவருக்கு பாகம் கிடைக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இரண்டாம் வாதி தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றும் அவர் அது குறித்து இதுவரை எந்தவிதமான ஆட்சேபனையும் தெரிவிக்காததால் அவருக்கு பாகம் கிடைக்க எந்தவிதமான தகுதி இல்லை என்றால் சரில்ல. பாகப்பிரிக்க இரண்டாம் வாதி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததால் அவருக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல ஜெயபிரகாஷ் மறைவிற்கு பிறகு எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் மட்டுமே பாகம் கிடைக்க வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. இது அவ்வாறு இருக்கையில் இரண்டாம் பிரதிவாதி ஒன்றாம் பிரதிவாதிக்கு 1.12.2021 ஆம் தேதி கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அது தவறான ஆவணம்.

6. அந்தக் கிரையத்தின் அடிப்படையில் ஒன்றாம் வாதி தான் அந்த கிரைய சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 3வது பத்தியில் முத்துலட்சுமி எனது தத்து தாயென சொல்லி உள்ளேன் என்றால் அது தவறுதலாக பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் பிரமாண வாக்கு மூலத்தில் தாவா

சொத்தில் உள்ள கட்டிடம் அபிவிருத்திகள் இயற்கை அமைப்பு அனைத்தும் குறிப்பிட்டு பாகம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்ஆனால் அது போன்ற சொத்து விவரங்கள் எதுவும் எனது வழக்குரையில் இல்லை என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு பாதி பரிகாரம் கோரப்பட்டுள்ளதாக கருதி தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது தந்தையின் அனைத்து சொத்தக்களும் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனவே நாங்கள் சொல்லியுள்ள பங்கு விகிதாச்சரம் தவறு என்றால் சரியல்ல.எனவே நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல நான் சரியான சொத்து விவரங்களை குறிப்பிடாமல் உண்மையை மறைத்து பொய்யான சங்கதிகள் முன்னிறுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு செலவு தூய்மையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(SD/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

.